SOCIAL WELFARE ORGANIZATION AMPARA DISTRICT

அம்பாரை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு.

# ஆண்டறிக்கை - 2010



“எங்கள் மக்களே எங்கள் பலமாகும்”

# உள்ளடக்கம்.


01. அறிமுகம்.
02. தொலைநோக்கு / **Vision**
03. பணிநோக்கு / **Mission**
04. குறிக்கோள்கள் :
05. இலக்குக் குழுக்கள் :
06. பணியாற்றும் பிரதேசங்கள்
07. நிறுவன முகாமைத்தவக் கட்டமைப்பு
08. பணியாளர்களின் எண்ணிக்கை விபரம்.
09. அங்கத்தவர்களின் எண்ணிக்கை விபரம்.

10. நடைமுறைப்படும் திட்டங்கள்

**10.1 பொருளாதார அபிவிருத்தி திட்டம்**
10.1.1 சேமிப்பு, கடன் திட்டம்
10.1.2 மரணாதாரத் திட்டம்
10.1.3 வாழ்வாதாரத் திட்டம்
10.1.4 தொழில் பயிற்சி வழங்கல்.
10.1.5 இளைஞர்களின் நிலைமாற்றல் செயல் திட்டம்.

**10.2 சமூக அபிவிருத்தி திட்டம்**
10.2.1 கல்வி அபிவிருத்தி செயற்பாடுகள்
10.2.2 சிறுவர் அபிவிருத்தி செயற்பாடுகள்
10.2.3 பெண்கள் அபிவிருத்தி செயற்பாடுகள்

**10.3.சுற்றாடல் / சூழல் அபிவிருத்தி திட்டம்**

11. நிதி வழங்கிய நிறுவனங்கள்.
12. பணியாளர்கள் பெற்றுக் கொண்ட பயிற்சிகள்.
13. நடைபெற்ற நிகழ்வுகள்.
14. இவ் வருடம் எமது அமைப்பிற்கு வருகைதந்த பிற நிறுவனங்கள்.

## 01. அறிமுகம்.

1990ம் ஆண்டிலும் அதன் பின்னரும் ஏற்பட்ட யுத்தத்தினாலும், வன்செயல்களினாலும், அரசின் இனஒதுக்கலினாலும் பௌதீக ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டு பின்தங்கியிருந்த மக்களின் வாழ்வை மேம்படுத்தி அவர்கள் வாழ்விற்கு புத்தொளியூட்டப்பட வேண்டுமென்ற நன்நோக்கில் அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பிரதேசங்களை கருத்தில் கொண்டு **திரு.சன்முகம் செந்துராசா** அவர்களினால் **1995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி** அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வமைப்பானது அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய 7 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 58 கிராமக் கிளைகளில் தமிழ்,முஸ்லிம், சிங்களம் ஆகிய மூவின மக்களினையும் உள்ளிணைத்து செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

செயற்பாட்டு வழிமூலங்களாக 7 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 6 பிரதேச காரியாலயங்களையும், 58 கிராமக் கிளை அலுவலகங்களையும், அக்கரைப்பற்றில் தலைமைக் காரியாலயத்தினையும் கொண்டு, 7233 அங்கத்தவர்களையும், 131 பணியாளர்களையும் இணைத்த வகையில் **ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராசா** அவர்களின் வழிகாட்டலின் கீழ் தொடர்ந்தும் கண்காணித்து வழிப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது.

## 02. தொலைநோக்கு / Vision

அம்பாறை மாவட்டத்தில் உள்ள நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை அடையும் பொருட்டு சேவைகளையும் சமமான வாய்ப்புக்களையும் வழங்கும் மீயுயர் நிறுவனம்.

## 03. பணிநோக்கு / Mission

விளைவுகள் அடிப்படையிலான வினைத்திறன் உள்ள சேவைகளை நலிவுற்ற மக்களுக்கு வழங்கும் முற்போக்கு எண்ணமுள்ள உதவுவோரையும், ஆக்கத்திறனும் மற்றவரை ஊக்குவிக்கும் திறனுள்ள பணியாளரையும் கொண்ட அமைப்பு.

## 04. நோக்கம் :

1. நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தலும், வறுமையை தணித்தலும்.
2. பாதிக்கப்பட்ட பெண் தலைமைதாங்கும் குடும்பங்களினது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தல்.
3. ஜனநாயக சமூகத்தில் மக்களின் பங்குபற்றுதலை விருத்தி செய்வதும், அதனை மேம்படுத்தலும்.
4. அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் மக்களுக்கு தன்னிறைவான வாழ்க்கையினைப் பெறுவதற்கு வழிகாட்டல்.
5. உள்ளூர் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவதற்கு வழிகாட்டல்.
6. வறிய மாணவர்களுக்கான கல்வி வசதிகளையும், வாய்ப்புக்களையும் வழங்குதல்.
7. சமூக நல்லுறவு மற்றும் இனங்களிடையிலான சமாதான நல்லுறவை ஏற்படுத்தல்.

## 05.இலக்குக் குழுக்கள் :

1. பெண்கள்.
2. சிறுவர்கள்.
3. முதியோர்கள்.
4. இளைஞர்கள்.
5. பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள்.
6. வறிய மாணவர்கள்.
7. மிகவும் வறிய குடும்பங்கள்.
8. பாதிக்கப்பட்ட மக்கள்.

## 06. பணியாற்றும் பிரதேசங்களும், கிராமங்களும்.

| | | |
|---|---|---|
| 01. பொத்துவில் | - | 9 |
| 02. திருக்கோவில் | - | 17 |
| 03. நாவிதன்வெளி | - | 11 |
| 04. கல்முனை | - | 9 |
| 05. சம்மாந்துறை | - | 6 |
| 06. காரைதீவு | - | 5 |

## 07. நிறுவன - முகாமைத்துவக் கட்டமைப்பு.

## 08. பணியாளர்கள் விபரம். (December-2010)

| இல | பணியாளர் | ஆண் | பெண் | மொத்தம். |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட மட்டம் | 26 | 12 | 38 |
| 2 | பிரதேச மட்டம் | 12 | 10 | 22 |
| 3 | கிராம மட்டம் | 0 | 26 | 26 |
| 4 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் | 0 | 45 | 45 |
| | **மொத்தம்.** | **38** | **93** | **131** |

## 09. அங்கத்தவர்கள் விபரம்.




## 10. நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள்.

10.1. **பொருளாதார அபிவிருத்தி திட்டம் :-** மக்கள் சுயதொழிலில் ஈடுபடுவதன் மூலம் வருமானத்தினை அதிகரித்து தன்னிறைவான மக்கள் சமூகத்தினை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி செயல் திட்டத்தின் கீழ் கீழ்வரும் செயற்பாடுகள் அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**10.1.1 சேமிப்பு, கடன் திட்டம்** :- சேமிப்புக் கடன் திட்டச் செயற்பாட்டின் கீழ் இவ்வாண்டில் 7 பிரதேசங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 1774 அங்கத்தவர்களுக்கு 64,986,000.00 ரூபாய் நிதி கடனாக வழங்கப்பட்டதுடன், இவ் வருட சேமிப்பாக 7,196,602.16 ரூபாய் நிதியும் அறவீடு செய்யப்பட்டுள்ளது.

**பிரதேசரீதியான கடன், சேமிப்பு விபரங்கள்.**
**(2010 January to December)**

| பிரதேசம் | வழங்கப்பட்ட கடன் | அறவீடு செய்யப்பட்ட சேமிப்பு |
|---|---|---|
| பொத்துவில் | 4,699,000.00 | 845,342.32 |
| திருக்கோவில் | 15,795,000.00 | 1,608,844.63 |
| காரைதீவு | 6,609,000.00 | 894,183.79 |
| கல்முனை | 13,159,000.00 | 1,492,470.97 |
| சம்மாந்துறை | 9,545,000.00 | 854,263.13 |
| நாவிதன்வெளி | 12,214,000.00 | 1,101,385.44 |
| ஆலையடிவேம்பு | 2,965,000.00 | 400,111.88 |
| **மொத்தம்** | **64,986,000.00** | **7,196,602.16** |

10.1.2. **மரணாதாரத் திட்டம்** :- அரசாங்க உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தில் மாதாந்தம் 5.00 ரூபாய் வீதம் வருடத்திற்கு 60.00 ரூபாய் செலுத்தும் அங்கத்தவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அங்கத்துவ குடும்பம் ஒன்றிக்கு மரணாதார உதவுதொகையாக முதல் தடவை 3000.00 ரூபாவும், இரண்டாம் மரணத்திற்கு 2000.00 ரூபாயுமாக 5000.00 ரூபாய் இத்திட்டத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் இவ்வருடம் 115 அங்கத்துவ குடும்பங்களுக்கு 333,000.00 ரூபாய் மரணாதார உதவு தொகையாக வழங்கப்பட்டுள்ளதுடன், 268,548.19 ரூபாய் இவ்வருட மரணாதார நிதியாகவும் அறவீடு செய்யப்பட்டுள்ளது.

**பிரதேசரீதியான மரணாதார விபரங்கள்.**
**(2010 January to December)**

| பிரதேசம் | அறவிடப்பட்ட மரணதாரம் | வழங்கப்பட்ட மரணாதாரம். |
|---|---|---|
| பொத்துவில் | 34,791.00 | 27,000.00 |
| திருக்கோவில் | 75,935.00 | 98,000.00 |
| காரைதீவு | 27,070.00 | 27,000.00 |
| கல்முனை | 49,733.00 | 72,000.00 |
| சம்மாந்துறை | 34,560.19 | 44,000.00 |
| நாவிதன்வெளி | 46,459.00 | 65,000.00 |
| **மொத்தம்.** | **268,548.19** | **333,000.00** |

10.1.3. **வாழ்வாதாரத் திட்டம்** :- நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் ஆறு பிரதேசத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 1774 பயனாளிகளிக்கு ரூபா 64,986,000.00 தொகை நிதியானது தொழில்களை மேற்கொள்வதற்காக கடனாக வழங்கப்பட்டுள்ளது.

கடன் வழங்குவதோடு மட்டும் நின்றுவிடாமல், பெற்றுக்கொண்ட கடனை உரியமுறையில் பயன்படுத்தி தொழில் முயற்சிகளில் ஈடுபடுவது குறித்து பிரதேசமட்ட கள உத்தியோகத்தர்கள் மற்றும் சேமிப்புக் கடன் திட்ட உத்தியோகத்தர்களினால் ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தொழில் ரீதியாக வழங்கப்பட்ட கடன் விபரங்கள்.
## (2010 January to December)

| தொழில் | பயனாளிகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட கடன். |
|---|---|---|
| விவசாயம் | 433 | 16,956,000 |
| வியாபாரம் | 73 | 4,517,000 |
| சிறு வியாபாரம் | 262 | 10,132,000 |
| வீட்டுத்தோட்டம் | 101 | 2,767,000 |
| தையல் | 75 | 1,988,000 |
| நெல் குற்றல் | 203 | 7,257,000 |
| மீன்பிடி | 59 | 1,806,000 |
| தச்சுத்தொழில் | 27 | 1,358,000 |
| கோழிவளர்ப்பு | 311 | 8,692,000 |
| மாடு வளர்ப்பு | 135 | 6,105,000 |
| ஆடு வளர்ப்பு | 47 | 1,425,000 |
| வீடுதிருத்தம். | 28 | 1,300,000 |
| கல் வெட்டுதல் | 20 | 683,000 |
| **மொத்தம்.** | **1774** | **64,986,000** |









❖ வாழ்வாதாரத் திட்டத்தினை மேம்படுத்தும் பொருட்டு, EU-ACAP திட்டத்தின் கீழ் சாகாமம், கஞ்சிகுடியாறு, விநாயகபுரம், தங்கவேலாயுதபுரம், ஹிஜ்ரா ரொட்டை, ஆகிய கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ...... விவசாயிகளை உள்ளிணைத்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புக்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

1. விதை நெல் உற்பத்தி.
2. மாற்றுத் தொழிநுட்ப விவசாயம்.
3. விவசாயக் காப்புறுதி, மற்றும் அதனோடு தொடர்புபட்ட ஓய்வூதியத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு.
4. வங்கி மற்றும் நிதி நிறுவனங்களினால் விவசாயிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள்.
5. CIC கம்பனி ஊடாக விவசாயிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள்.
6. நிதி முகாமைத்துவம்.
7. விவசாயிகள் எதிர்நோக்கும் அனர்த்தங்களும், அவற்றை தனிப்பதற்கான வழிமுறைகளும். (DRR)
8. நெல் விவசாயமும் மரக்கறிப் பயிர்ச்செய்கையும்.
9. விவசாயக் குழுக்களின் நோக்கம், தலைமைத்துவம், நிர்வாக முகாமைத்துவம்.
10. வளங்களை அடையாளம் காணுதல், பிரச்சினை, தடைகளை தீர்க்கும் வழிமுறைகள்

❖ வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திருக்கோவில், பொத்துவில் பிரதேச விவசாயிகள் 116பேருக்கு பிரதேச செயலாளர் ஊடாக வயல், மேட்டுநிலங்களை பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.





❖ SOND நிறுவனத்தின் ஊடாக வினாயகபுரம் 01,02,03,04 கிளைகளிலுள்ள 100 விவசாயிகளுக்கு வீட்டுத்தோட்டத்திற்கான விதையினங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், ரொட்டை-ஹிஜ்ரா கிராமத்தின் 53 விவசாயிகளுக்கு விவசாய திணைக்களத்தின் மூலம் 53 மண்வெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

- 40 விவசாயிகளுக்கு கமநல சேவை நிலையங்களினூடாக ஊடாக 1075 பப்பாசிக் கன்றுகளும், கொச்சி, கத்தரி போன்ற விதையினங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.





- 271 விவசாயிகளுக்கு வங்கியில் சேமிப்புக்கணக்கு திறந்து சேமிப்புச் செய்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன், வங்கியினூடாக வாழ்வாதார திட்டக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.






❖ இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தங்கவேலாயுதபுரம், சாகாமம் ஆகிய கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 54 விவசாயிகளுக்கு 10 இலட்சத்தி 50 ஆயிரம் ரூபாய் மீளச் செலுத்தும் கடனாக இலங்கை வங்கி, ஹற்றன் நஷனல் வங்கிகளினூடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.







❖ வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து சாகாம கிராமத்தில் குடியேறிய மக்களுக்கும், அக் கிராமத்தில் அடிப்படை வசதி குறைந்த மக்களுமாக 200 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு (OXFAM) நிறுவனத்தின் அனுசரணையில் 358,600.00 ரூபா செலவில் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.





❖ மக்களின் தேவைகளை அவர்களாகவே பெற்றுக்கொள்வதற்கு இலகுபடுத்தும் நோக்குடன், அரச அதிகாரிகளின் தகவலுக்கு அமைவாக அரச சேவைகளை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் பற்றி Diakonia நிறுவனத்தின் நிதி உதவியுடன் 1000 கைநூல்கள் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

❖ CIC company ஊடாக அனுராதபுர விவசாயப்பண்ணையினை பார்வையிடுவதற்காக விவசாய போதனாசிரியர், முதற்தர விவசாயிகள் உட்பட SWOAD சார்பாக 5 பேர் கலந்து கொண்டு இரு நாள் Exposure visit செய்யப்பட்டுள்ளது.




❖ கொழும்பில் நடாத்தப்பட்ட சிறு தொழில் உற்பத்திப் பொருட்களுக்கான இயந்திர கண்காட்சியில் SWOAD சார்பாக 13 பேர் கலந்து கொண்டு காட்சிப்படுத்தப்பட்ட பொருட்களின் செயல்முறைகள், பயன்பாடுகள் தொடர்பான அறிவைப் பெற்றுள்ளனர்.




### 10.1.4 தொழில் பயிற்சி வழங்கல்.

மேற்படிப்பினை தொடரமுடியாத நிலையில் பாதிக்கப்பட்ட வறுமை நிலையிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியினை வழங்குவதன் ஊடாக தொழில் வாய்ப்பிற்கான வழிகாட்டலை வழங்குவதை நோக்காக் கொண்டு உலக கனேடிய பல்கலைக்கழக நிறுவனத்தின் (WUSC) 2,484,380.00 ரூபாய் நிதி உதவியுடனும், ODW (Operational Days Work) நிறுவனத்தின் 4,230,250.00 ரூபாய் நிதி உதவியுடனும் தச்சுப்பயிற்சி, மின்வினைஞர், அழகுக்கலை, குளிரூட்டி திருத்துனர், கையடக்கத் தொலைபேசி திருத்தும் பயிற்சிகளும் நடாத்தப்படுகின்றது. இத் தொழிற்பயிற்சிகளின் மூலம் 155 இளையோர்கள் பயன்பெறுகின்றார்கள்.
இத் தொழிற்பயிற்சி மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவாக இவ்வருடம் 1,198,200.00 ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதுடன், இப்பயிலுனர்களுக்கான மொழியறிவினை விருத்திசெய்யும் நோக்கில் ஆங்கிலம் மற்றும் சிங்கள பாடநெறிகளுக்கான வகுப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளது.

**தொழில் பயிற்சிநெறி பற்றிய விபரங்கள் - 2010.**

| இல | தொழில் பயிற்சி விபரம் | பிரதேசம் | பயிலுனர் எண்ணிக்கை விபரம். | | | நிதி நிறுவனம் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | மொத்தம் | |
| 1 | தச்சுப் பயிற்சி நெறி. | திருக்கோவில் | 20 | ..... | 20 | ODW |
| 2 | மின்வினைஞர் பயிற்சி. | கல்முனை | 20 | ..... | 20 | |
| 3 | கையடக்கத் தொலைபேசி திருத்துனர் பயிற்சி. | ஆலையடிவேம்பு | 10 | 10 | 20 | |
| 4 | குளிரூட்டி திருத்துனர் பயிற்சி. | ஆலையடிவேம்பு | 20 | .... | 20 | |
| 5 | அழகுக்கலைப் பயிற்சி | ஆலையடிவேம்பு | .... | 25 | 25 | |
| 6 | பூக்கொத்துதல் | | ..... | 25 | 25 | |
| 7 | பூக்கொத்துதல் | பொத்துவில் | ..... | 25 | 25 | WUSC |
| **மொத்தம்.** | | | **70** | **85** | **155** | |

❖ இப் பயிலுனர்களுக்கு ஆரம்பகட்டப் பயிற்சிகயாக முதலுதவி, சமூகப் பாதுகாப்பு, போசாக்கு, எச்.ஐ.வி.எயிட்ஸ், பால்நிலைச்சமத்துவம், தொழில் திறன், வாழ்வாதாரத்திட்டம் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், இப்பயிற்சியின் முக்கியத்துவம் தொடர்பாகவும், தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பாகவும், இதில் பெற்றார்களின் ஒத்துளைப்பு, ஊக்குவிப்பு, கண்காணிப்புக்கள் தொடர்பாகவும் இம்மாணவர்களின் பெற்றோர்களுக்கு 04 விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டுள்ளன.





**தொழில் பயிற்சி மாணவர்களுக்கான தனிநபர் காப்புறுதி செய்து கொடுத்தல்.**
இத் தொழில் பயிற்சி மாணவர்களின் பாதுகாப்புக்கருதி 135 மாணவர்களுக்கு 136,650.00 ரூபாய் செலவில் ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தில் தனிநபர் காப்புறுதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

| இல | தொழில் பயிற்சி விபரம் | மாணவர்களின் எ-கை | காப்புறுதி செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 01 | குளிரூட்டி திருத்துனர் பயிற்சி. | 21 | 22,050.00 |
| 02 | தச்சுப் பயிற்சி | 20 | 21,100.00 |
| 03 | மின்வினைஞர் பயிற்சி | 22 | 23,000.00 |
| 04 | கையடக்கத் தொலைபேசி திருத்துனர் பயிற்சி. | 20 | 19,000.00 |
| 05 | அழகுக்கலைப் பயிற்சி | 26 | 25,750.00 |
| 06 | பூக்கொத்துதல் | 26 | 25,750.00 |
| **மொத்தம்.** | | **135** | **13,6650.00** |

**பயிற்சியினை முடித்துக்கொண்ட பயிலுனர்களுக்கான தொழில் உபகரணங்களும், சான்றிதழும் வழங்குதல். :-**

தாம் பெற்றுக்கொண்ட பயிற்சி நெறியின் மூலம் தொழில் செய்து வருமானத்தினைப் பெற்றுக் கொள்ளும் வகையில், தொழிற்பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சிநெறியை முடித்துக்கொண்ட 70 மாணவர்களுக்கு NVQ சான்றிதழும், தொழிலை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காக 15,000.00 ரூபாய் பெறுமதியான தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

| **இல** | **தொழில் பயிற்சி விபரம்** | **மாணவர்களின் எ-கை** |
|---|---|---|
| 1 | கையடக்கத் தொலைபேசி திருத்துனர் பயிற்சி. | 17 |
| 2 | குளிரூட்டி திருத்துனர் பயிற்சி. | 16 |
| 3 | அழகுக்கலைப் பயிற்சி | 19 |
| 4 | பூக்கொத்துதல் | 18 |
| **மொத்தம்.** | | **70** |






உலக உணவு ஸ்தாபனம், மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் உதவியுடன் AC Course மாணவர்கள் 21பேருக்கு அரிசி, மா,.சீனி, பருப்பு போன்ற உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.






**10.1.5 சமூக மட்டத்திலமைந்த இளைஞர்களின் நிலைமாற்றல் செயல் திட்டம்.**

அம்பாறை மாவட்டத்தில் யுத்த சூழல், அனர்த்தங்களின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளை (தமிழ், முஸ்லீம், சிங்களம்) இலக்காகக் கொண்டு UNICEF அமைப்பின் நிதி உதவியுடனும், WUSC அமைப்பின் அனுசரணையுடனும் செயற்படுத்தப்பட்டுவரும் இச் செயற்திட்டத்தினூடாக பாதிக்கப்பட்ட இளையோர்களுக்கு வாழ்க்கை தொடர்பான உள்ளுணர்வினை ஏற்படுத்தி, சமூகத்துடன் மீள இணைவதற்கும், கல்வி, பொருளாதாரத்தில் மேம்பாட்டை அடையும் பொருட்டும், தொழில் தொடர்பான திறனை விருத்தி செய்து வாழ்க்கைத் தெரிவுகளை திட்டமிட்டு செயற்படுத்தக்கூடிய வகையில் இளைஞர்களிடையே நிலைமாற்றத்தினை ஏற்படுத்தும் பொருட்டு கீழ் வரும் செயற்பாடுகள் அமைப்பினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

**01. பயிற்சிக் கருத்தரங்குகளை நடாத்தல்.**

இச்செயற்பாட்டின் கீழ் 226 (ஆண்-117, பெண்-109) இளைஞர் யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு இவர்களை 9 குழுக்களாகப் பிரித்து கீழ் வரும் தலைப்புகளில் பல வளவாளர்களைக் கொண்டு, ஒரு குழுவிற்கு 15 நாள் கொண்ட தங்குமிடப்பயிற்சியாக சுவாட் தம்பட்டை பயிற்சி நிலையத்தில் 119 பயிற்சிக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

01. வாழ்க்கைத் தேர்ச்சி.
02. ஆளுமை அபிவிருத்தியும், தலைமைத்துவமும்.
03. குழுக்கள், அணிகள் உருவாக்கம்.
04. சமூக உளநலம்.
05. முயற்சியாண்மை அபிவிருத்தி.
06. தொழில் வழிகாட்டல்.
07. பால்நிலை அபிவிருத்தி.
08. கட்டிளம் பருவம், மகப்பேற்றுச் சுகாதாரம்,
09. போரினாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்ட மக்களின் சமூக, உளநலம்
10. முரண்பாடும் அதற்கான தீர்வுகளும்.
11. மாற்றமும் அதனை ஏற்றலும்.
12. இளைஞர்கள் எதிர்கொள்ளுகின்ற சமூகப்பிரச்சனைகள் (போதைப்பொருள்,மதுபானம் என்பவற்றுக்கு அடிமைப்படுதலும் தவிர்ப்பும்.)





 

**02. பயிற்சியாளர்களின் இலக்கு தேர்வு அடிப்படையில் குறிப்பிட்ட இடங்களில் அவர்களை தொடர்புபடுத்தி தனக்கென ஒரு சுய தொழில் மூலம் வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையினை அமைத்துக் கொடுத்தல்.**

இச் செயற்பாட்டின் ஊடாக சமூகத்துடன் இணைக்கப்பட்ட இளைஞர், யுவதிகளினால் செயற்படுத்தப்பட்டு வரும் செயற்பாடுகள்.

01. 11மாணவர்கள் பாலர் பாடசாலைகளில் தொண்டர்களாக கடைமையாற்றுகின்றனர்.
02. வர்ணப்பூச்சு பயிற்சியினை முடித்துக்கொண்ட 17 மாணவர்கள் தங்கள் உறவினர்கள் வீடுகளுக்கு வர்ணம் பூசிக்கொடுத்து வருமானத்தைப் பெற்று வருகின்றனர்.
03. 10 மாணவர்கள் தங்களது பிரதேசங்களில் வசதி குறைந்த வறிய மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புக்களை நடாத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.
04. 7 மாணவர்கள் communication,Computer center, Baby care கடைகளில் வேலை செய்து வருகின்றனர்.
05. 14 மாணவர்கள் ஆடைத் தொழில்சாலைகளில் வேலை செய்கின்றனர்.
06. சில மாணவர்கள் சிறுவர் கழகம் அமைத்து அதனை செயற்படுத்தி வருகின்றனர்.
07. 40 மாணவர்கள் சுவாட் அமைப்பினால் நடாத்தப்படுகின்ற தொழில் பயிற்சி நெறியில் இணைந்து பயிற்சியினை பயின்று வருகின்றனர்.(Carpentry course ,A/C Course, Phone Repairing, Beauty culture course, Tailoring course, painting course)
08. உணவு பதனிடல் பயிற்சி நெறியில் 06 மாணவர்கள் இணைந்துள்ளனர்.
09. 02 விளையாட்டு கழகங்களை அமைத்து செயற்படுகின்றனர்.
10. 15 மாணவர்கள் SWOAD, SOND அலுவலகங்களில் தொண்டர்களாக கடைமை புரிகின்றனர்.
11. படிப்பை இடைவிட்ட 10 மாணவர்கள் தங்கள் மேல் படிப்பினை தொடர்ந்து கற்று வருகின்றனர்.

12. 02 மாணவர்கள் MOH அலுவலகத்தில் தொண்டர்ககளாக கடைமை புரிகின்றனர்.

13. விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபடல் :

(பயிற்சி முடிக்கப்பட்ட இளைஞர் யுவதிகள் இவ் நிலைமாற்று செயல் திட்டத்தின் கீழ் நடாத்தப்படும் பயிற்சிக் கருத்தரங்குகளில் கற்பிக்கப்படும் விடயங்களை தங்கள் கிராமங்களில் நடைபெறுகின்ற கூட்டங்களின் போதும், கோயில் நிகழ்வுகளின் போதும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், சுவரொட்டிகள் மூலமாகவும் வெளிப்படுத்தி வருகின்றனர்.)

14. சிரமதானப் பணிகளில் ஈடுபடல்.

(இச் செயல் திட்டத்தில் ஒரு அங்கமாக திட்டத்தில் உள்வாங்கப்பட்ட அனைத்து இளைஞர் யுவதிகளையும் ஒன்றிணைத்து மாதம் இரு தடவை பிரதேச செயலகங்கள், MOH Office, பாலர் பாடசாலைகள், கோயில்கள் ,பொது வீதிகள், சுவாட் பிரதேச அலுவலகங்கள், வைத்தியசாலைகள், RDS கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகிய இடங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.)









இளைஞர் யுவதிகளிடையே நல்லுறவினை ஏற்படுத்தும் நோக்குடன் USAID நிறுவனத்தின் நிதி உதவியோடு SOND அமைப்பினால் நடாத்தப்பட்ட மென்பந்து, கிரிக்கட் சுற்றுப்போட்டிகளுக்கு 26 மாணவர்கள் (13ஆண்,13பெண்) தெரிவு செய்யப்பட்டு, இவர்களுக்கான ஆரம்பகட்ட நிகழ்வானது மட்டக்களப்பு சர்வோதயா சத்திரக்கொண்டான் நிலையத்திலும், மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்திலும் USAID,SOND பிரதிநிதிகள் தலைமையில் நடாத்தப்பட்டது.

இவர்களுக்கான இறுதிப் போட்டிகளானது 2011 மாசி மாதம் மட்டக்களப்பில் நடாத்தப்படவுள்ளது. இவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், சீருடைகள் போன்றன வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





**04. ஜீவனோபாயத்திட்டம் வழங்கல்.**

இளைஞர் நிலைமாற்றல் செயற்திட்டத்தில் பயிற்சி முடிக்கப்பட்டு நான்கு மாதம் தங்கள் பிரதேச சமூகத்தோடு ஒருங்கிணைக்கும் நோக்கில் வேலைக்காக அமர்த்தப்பட்ட இளைஞர் யுவதிகள் 48 பேரை நேரடியாக மதிப்பீடு செய்து இதில் தெரிவு செய்யப்பட்ட 05 இளைஞர்களுக்கு ILO நிறுவனத்தினூடாக 290,000.00 ரூபாய் செலவில் தொழிலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**முதல் கட்டமாக ஜீவனோபாயத்திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்பட்ட இளைஞர்களின் விபரங்கள்.**

| இல | பெயர் | தொழில் | வழங்கப்பட்ட உதவி |
|---|---|---|---|
| 01 | A.சத்தியராஜ் | Phone Repairing | 75000/= பெறுமதியான Phone திருத்தும் பொருட்கள், கணணி |
| 02 | S.பிரபாகரன் | தோட்டச் செய்கை | Water Pump – 45000/= |
| 03 | S.கோகுலபிரசாந் | ஓடாவி | தச்சு தொழிலுக்கான கருவிகள் - 50000/= |
| 04 | A.சர்மிலன் | தோட்டச் செய்கை | Water Pump – 45000/= |
| 05 | T.ரமேஸ் | மீன் பிடி | தோணி வலை – 75000/= |

இரண்டாம் கட்டமாக 10 யுவதிகளுக்கு கணனிப் பயிற்சி, கணனி திருத்தும் தொழில் பயிற்சிகள் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், சிறு கடை போடுவதற்காக இரு யுவதிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**திட்டம் தொடர்பான கள மதிப்பீடு செய்தல்.**

Wusc, unicef ஆகிய நிறுவனங்களினால் இத்திட்டம் தொடர்பான தேவைகள் பிரச்சனைகள் குறித்து 2010.08.27ம் திகதி கள மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன், Wusc நிறுவன திட்ட முகாமையாளர் அவர்களினால் இப்பயிற்சிநெறியினை முடித்துக்கொண்ட மாணவர்களை நேரடியாகச் சந்தித்து இப்பயிற்சியின் மூலம் அவர்கள் கற்றுக்கொண்ட விடயங்கள், எதிர்நோக்கிய பிரச்சினைகள், ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாகவும் ஆய்வு செய்யப்பட்டது.





**10.2 சமூக அபிவிருத்தி திட்டம்.**

**10.2.1 கல்வி அபிவிருத்தி செயற்பாடுகள்** : கல்வி கற்க ஆர்வமுடைய வறிய மாணவர்களின் நலன் கருதி கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் Diakonia நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைப்பினால் கீழ்வரும் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

**01. கா.பொ.த உயர்தர மாணவர்களுக்கான மீட்டல் வகுப்பு நடாத்தல் :**
திருக்கோவில், நாவிதன்வெளி ஆகிய இரு பிரதேசங்களில் இருந்தும் கா.பொ.த உயர்தர கலைப்பிரிவில் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களுக்கான இந்து சமயம், அரசியல், தமிழ், இந்து நாகரீகம் ஆகிய பாடத்திட்டங்களுக்கான மீட்டல் வகுப்பானது தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயம், நாவிதன்வெளி விவேகானந்தா மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடாத்தப்பட்டுள்ளது. இவ் மீட்டல் வகுப்புக்களில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர்.

**02. கா.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான மீட்டல் வகுப்பு நடாத்தல்.**

பொத்துவில் பிரதேசத்தில் கா.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களுக்கான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடத்திட்டங்களுக்கான மீட்டல் வகுப்புக்களானது பொத்துவில் மெதடிஸ் தமிழ் மகாவித்தியாலயத்தில் நடாத்தப்பட்டுள்ளது. இதில் 75மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர்.






**03. கல்வி உபகார நிதி வழங்கல்** :-

வறிய மாணவர்களின் கல்வியினை மேன்படுத்தும் நோக்கில் கல்வி உபகார நிதி வழங்கல் செயல் திட்டத்தின் கீழ் பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, சம்மாந்துறை, கல்முனை, நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு ஆகிய 7 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு நிபந்தனையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக, கா.பொ.த. உயர்தர மாணவர்கள் 11 பேருக்கு கல்வி உபகார நிதியாக இவ்வருடம் 93,250.00 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.





**10.2.2 சிறுவர் அபிவிருத்தி செயற்பாடுகள்.**

**01. பாலர் பாடசாலை நடாத்தல்** :- சிறுவர் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களில் 26 பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப் பாலர் பாடசாலையில் 45 ஆசிரியர்கள் கற்பித்து வருவதுடன் 509 ஆண்களும், 463 பெண்களுமாக 972 சிறார்கள் கல்விகற்றும் வருகின்றனர். இப் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவாக இவ்வருடம் 1,078,000.00 ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**பாலர் பாடசாலை பற்றிய விபரங்கள். (2010)**

| இல | பிரதேசம் | பாடசாலைகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 1 | பொத்துவில் | 02 | 58 | 04 |
| 2 | திருக்கோவில் | 09 | 381 | 15 |
| 3 | காரைதீவு | 02 | 73 | 03 |
| 4 | கல்முனை | 03 | 111 | 06 |
| 5 | சம்மாந்துறை | 02 | 58 | 02 |
| 6 | நாவிதன்வெளி | 08 | 291 | 15 |
| | **மொத்தம்** | **26** | **972** | **45** |

**02. முன் பள்ளி மாணவர்களுக்கிடையே கலாச்சார நிகழ்வுகள், போட்டிகளை நடாத்தல். :-**

கல்வி கற்றுவரும் சிறார்களின் திறன், ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் நோக்கில் கல்முனை, காரைதீவு, நாவிதன்வெளி, திருக்கோவில், பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் இப்பிரதேச மட்டத்தில் செயற்பட்டு வரும் பாலர் பாடசாலைகளை ஒன்றிணைத்து இம்மாணவர்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகளும், இவ்வாண்டிற்கான விடுகை விழாக்களும் நடாத்தப்பட்டு மாணவர்களுக்கான ஊக்குவிப்பு பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன.





**03. பெற்றார் நிர்வாகத்திற்கான மாதாந்த ஒன்றுகூடல் நடாத்தல்:-**

மாணவர்களின் கல்வி முன்னேற்றங்கள், குறைபாடுகள் குறித்தும், கல்வி மேம்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு தொடர்பாகவும் மாதாந்தம் பெற்றோர்களுக்கான ஒன்றுகூடலானது அமைப்பினால் நடாத்தப்பட்டு வருகின்றன. இப் பெற்றார் நிர்வாகத்தினால் மாணவர்களுக்கான சீருடை, மதிய உணவு மற்றும் நிகழ்வுகளுக்கான பங்களிப்பு, சிரமதான நடவடிக்கைகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.











**04. பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை நடாத்தல்.**

பாலர் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமையினை மேம்படுத்தும் முகமாக இணைப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களினால் முன்பள்ளி ஆசிரியர்கள் 41பேரை உள்ளிணைத்து கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளதுடன், கழிவுப் பொருட்களைக் கொண்டு காட்சிப்படுத்தல் பொருட்கள் தயாரிப்பது தொடர்பாக திறன் மேம்பாட்டுப் பணிப்பாளர் திருமதி. கௌரிஸ்வரன் சுகிர்தினி அவர்களினால் இரு பயிற்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன.

### 10.2.3 பெண்கள் அபிவிருத்தி செயற்பாடுகள்.:-

சமூகத்தில் பெண்களுக்கான சுயவருமானத்தினை அதிகரித்து பால்நிலை வேறுபாடின்றி சம அந்தஸ்த்தினை வழங்குவதன் ஊடாக பெண்களின் தலைமைத்துவத்தையும், விழிப்புணர்வினையும் ஏற்படுத்தி சுயமாக தீர்மானங்களை எடுக்கும் நிலைக்கு பெண் சமூகத்தினை உயர்த்தும் நோக்கில் அமைப்பினால் கீழ்வரும் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

**01. சுய சார்புக் குழுக்களை அமைத்து இக்குழுக்களின் ஊடாக சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.**

சமூகப் பொருளாதார நிலையில் நலிவுற்று முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட மக்களை குழுக்களாக ஒன்றிணைத்து பால்நிலை, வயது, சமய, அரசியல் பாகுபாடு அற்ற நிலையில் வழிகாட்டல்கள், ஆலோசனைகள், உதவிகளை வழங்கி, அவர்கள் தமது சுய நடவடிக்கைகளின் ஊடாக நீடித்து நிலைத்திருக்கத் தக்கதும், கௌரவமானதுமான தன்னிறைவான வாழ்க்கையை வாழும் நிலையினை உருவாக்கும் நோக்கில் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான 6 பிரதேசங்களிலுமுள்ள கிராமக் கிளைகளில் 324 சுய சார்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு இக் குழுக்களின் ஊடாக கிராம அபிவிருத்தி செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சுய சார்புக் குழுக்களின் ஊடாக செயற்படுத்தப்படும் கிராம அபிவிருத்திச் செயற்திட்டங்கள்.**

**I. சமூக மேம்பாடு**

- மகளீர் மத்தியில் ‘‘நமக்கு நாமே’’ என்ற உணர்வினை ஏற்படுத்துதல்.
- சாதி,சமய வேறுபாடுகளை நீக்கி மகளீரிடையே நல்லிணக்கத்தை உருவாக்குதல்.
- சமூகத்திலும், குடும்பத்திலும் முடிவெடுக்கும் பொறுப்பினை பகிர்ந்தளிக்கச் செய்தல்.
- பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்தல்.
- மகளிருக்குள் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துதல்.
- சுகாதாரம், குடும்ப நலம் போன்றவற்றில் தெளிவினை உண்டாக்குதல்.
- கிராமத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணிகளில் ஈடுபடுதல்.
- சமூக விழிப்புணர்வை உருவாக்குதல்.

**II. பொருளாதார மேம்பாடு**

- அத்தியாவசிய, அவசர கடன் தேவைகளை சுயமாகப் பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தல்.
- கடன் தேவைகளுக்கு வட்டிக்குப் பணம் கொடுப்போரை சார்ந்து இருப்பதை முழுமையாக தவிர்த்தல்.
- சேமிப்பை அதிகரித்தல்.
- ஓய்வு நேரங்களில் வருவாய் ஈட்டும் தொழிலில் ஈடுபடுதல்.
- தொழில் திறன் பெற்று, குடும்ப பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான வழிவகை காணுதல்.
- பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை பெற்று முன்னேறுவதற்கான திறனை வளர்த்தல்.
- உற்பத்தி செய்த பொருட்களை இடைத்தரகர் இன்றி விற்பனை செய்யும் வகையில் விற்பனைத் திறனை வளர்த்தல்.

**III. திறன் வளர்த்தல்.**

- பெண்களுக்கு பேசும் திறன், எழுதும் திறன், வாசிக்கும் திறன் ஆகியவற்றை வளர்த்தல்.
- நல்ல தலைமைப் பண்புகளை வளர்த்தல்.
- முடிவெடுக்கும் திறனை மேம்படுத்தல்.
- நடைமுறை வாழ்க்கைக் கல்வியை கற்றுக் கொடுத்தல்.
- விடாமுயற்சி கொண்டு செயல்களை முடிக்கும் திறனை மேம்படுத்துதல்.
- தன்னம்பிக்கையினை வளர்த்தல்.
- பெண்களுக்கான சட்டங்கள், உரிமைகளை அறிந்து செயலாக்கத்தில் ஈடுபடச் செய்தல்.
- தகவல் தொடர்புத் திறனை வளர்த்தல்.
- பதிவேடுகள் பராமரிக்கும் திறனை வளர்த்தல்.
- குழுவாக இணைந்து சாதனைகள் புரிந்திடும் ஆற்றலை வளர்த்தல்.
- தொழில் திறன் பயிற்சி அளித்தல்.
- கணினி, மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தும் திறமைகளை வளர்த்தல்.
- திறன்களை வளர்த்துக் கொண்டு குடும்ப, கிராம, நகர்புற மேம்பாட்டிற்கு வழிவகை செய்தல்.
- சமூக நீதிக்காக போராடும் திறனை உருவாக்கல்.

குழுத் தலைவிகளுக்கான குழு வலுவூட்டல் தொடர்பாக இணைப்பாளர் திரு.ச.செந்துராசா மற்றும் கொள்திறன் மேம்பாட்டுப் பணிப்பாளர் திருமதி சுகிர்தினி கௌரீஸ்வரன் அவர்களினால் 17 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது. இதில் 396 குழுத்தலைவிகள் கலந்து கொண்டுள்ளனர்.





கிளை ரீதியாக செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக 6 பிரதேசத்திலும் கிளை ரீதியாக கிளைக்கூட்டம், குழுக்கூட்டம், குழுத்தலைவிகள் கூட்டம் நடாத்தப்பட்டு பிரதேச, கிராம மட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள் ஆராயப்பட்டு அவற்றுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.





**02. பால் நிலை சமத்துவ மேம்பாட்டிற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.**

❖ பெண்களுக்கெதிரான வன்முறையைக் குறைத்து எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ள பிரச்சார நிகழ்வுகளை நடைமுறைப்படுத்தக் கூடியவாறு பெண்களை தயார்படுத்தும் நோக்கில் EU ACAP திட்டத்தின் கீழ் இத்திட்ட செயற்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 130 பெண்களை உள்ளிணைத்து 8 (We Can) குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், பாலியலை அடிப்படையாகக் கொண்டு பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பாக 21மாதாந்தக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன.






- ❖ பெண் தலைமைத்துவம், பெண்கள் அபிவிருத்தி, பெண்கள் உரிமைகள், பால்நிலை அபிவிருத்தி மேம்பாடு தொடர்பாக செயல்திறன் மிக்க பெண்கள் குழுக்களை ஒன்றிணைத்து 10 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்குகளில் 281 குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர்.




- ❖ பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பாக கிராம மட்டத்தில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும், கிராமக் குழுக்களுக்கும் விழிப்புணர்வூட்டி அவர்களிடையே ஓர் ஒன்றிணைந்த வலைப்பின்னலை ஏற்படுத்தும் நோக்கில் RDS அங்கத்தவர்கள், கிராம மட்ட செயற்திறன்மிக்க பெண்கள் குழு அங்கத்தவர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், மற்றும் திருக்கோவில் பொலிஸ் மகளிர் பிரிவு அதிகாரிகள் உட்பட 71 பேரை உள்ளிணைத்து 03 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.




- ❖ கிராமிய மட்டத்தில் பயனாளிகளிடையே உள்ள மது பாவனையின் அளவைக் குறைத்து அவற்றை இல்லாமற் செய்யும் நோக்கில் போதைப்பொருள் பாவிப்பதனால் ஏற்படும் தீங்குகள் பற்றி திருக்கோவில், பொத்துவில் ஆகிய பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 109 பேரை உள்ளிணைத்து 04 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

- இடம் பெயர்ந்தோருக்கான அடிப்படைக் கொள்கைகள், நடைமுறைகள் தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட 114 பயனாளிகளை உள்ளிணைத்து 04 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்கின் ஊடாக தமது உரிமைகளைப் தாமாகவே உரிய அதிகாரிகளைத் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்வதற்கான நிலையினை இவர்கள் பெற்றுள்ளனர்.





- உறவுகளைக் கட்டியெழுப்புதல், முரண்பாட்டு முகாமைத்துவம் தொடர்பாக சமூகத் தலைவர்கள், இளையோர்கள் 122 பேரை உள்ளிணைத்து 04 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது.

- HIV/AIDS தொடர்பாக கிராமத்தலைவர்கள், இத்திட்டப் பணியாளர்கள் 45 பேரை உள்ளிணைத்து வளவாளர் திரு. விக்கினேஸ்வரன் அவர்களினால் 02 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது.

- பெண்களின் வன்முறை தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கில் ………… ரூபாய் செலவில் 6000 துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.






**10.2. சுகாதார மேம்பாடு:-**

- ❖ கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பொது சுகாதார தொண்டர் குழு உறுப்பினர்களைக் கொண்டு MOH ஊடாக திருக்கோவில் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பாக சிரமதானம் செய்யப்பட்டுள்ளது.





- ❖ மலேரியா, டெங்கு நோய் தொடர்பாக திருக்கோவில், பொத்துவில் பிரதேச MOH இணைந்து வினாயகபுரம் -04 கிளையில் 164 பேருக்கு இலவசமாக இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

- ❖ சாகாமப் பிரதேசத்தில் EU திட்டத்தின் ஊடாக நீர் வழங்கல் முகாமைத்துவச் சபையுடன் கலந்துரையாடப்பட்டு குளாய் நீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ❖ சிறுவர்களுக்கான பொது சுகாதார மேம்பாடு தொடர்பாக(CHAST) 24 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்குகளில் சிறுவர் கழகங்கள், கிராம சுகாதார தொண்டர் குழுக்கள், பிற நிறுவனப் பணியாளர்கள் உட்பட 1002 பேர் கலந்து கொண்டனர்.





- பொது சுகாதார உடல் நல மேம்பாடு குறித்து (PHAST) தெரிவு செய்யப்பட்ட கிராம மக்கள், சிறுவர்கள், பொது சுகாதார தொண்டர் குழுக்கள் மற்றும் கிராமத்தலைவர்கள் உள்ளடங்களாக 198 பேரை உள்ளிணைத்து 07 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

- நீர் முகாமைத்துவம், சுகாதார அடிப்படைக் கொள்கைகள் தொடர்பாக வினாயகபுரம்-01,02,03,04 மற்றும் சாகாமம், தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு, ஹிஜ்ரா, ரொட்டை ஆகிய கிராமக் கிளைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அரச அதிகாரிகள், பிற நிறுவனப் பணியாளர்கள் 426 பேரை உள்ளிணைத்து 08 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

- பொது சுகாதார முன்னேற்றங்கள் குறித்து சுகாதார திணைக்கள அதிகாரி திருமதி. S.ராஜேந்திரா அவர்களைக் கொண்டு 03 Quarterly meeting நடாத்தப்பட்டுள்ளது. இதில் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், நீர்வழங்கல் வடிகால் திணைக்கள அதிகாரிகள், அரச சார்பற்ற அமைப்புக்கள் உள்ளடங்களாக 75 பேர் கலந்து கொண்டு, நீர், பொது சுகாதார அபிவிருத்தியில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் திணைக்கள ரீதியாக ஆராயப்பட்டது.





- டெங்கு நோய் தொடர்பான தெரிவு செய்யப்பட்ட கிராம மக்கள், கிராமமட்ட சுகாதார தொண்டர் குழுக்கள் 94 பேரை உள்ளிணைத்து PHI திரு.மகேஸ்வரன், MOH திருமதி சுலக்ஷனா ஆகியோரைக் கொண்டு 03 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது.

- அனர்த்த மறுசீரமைபின்போது அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பாக (SPHERE நியமம்) அரச அதிகாரிகள், மற்றும் பிற நிறுவனப் பணியாளர்கள் 32பேரை உள்ளிணைத்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளதுடன், பணியாளர்களுக்கு Sphere நியமம் தொடர்பான 08 புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன.

- EU திட்டத்தின் மூலம் சேம்பர் ஊடாக வினாயகபுரம் FCCISL பயிற்சி நிலையத்தில் சுவர் பெயின்ட், கட்டுமாணப்பணி தொடர்பான பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் 29பேர் கலந்து கொண்டுள்ளனர்.

❖ சுகாதார கருத்து வெளிப்பாட்டினைக் கொண்ட 1500 கையேடுகளும், 9000 துண்டுப்பிரசுரங்களும் வெளியீடு செய்யப்பட்டுள்ளன.













**திறன் மேம்பாட்டுத் திட்டம் :-**

❖ கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களது வேலைகள் தொடர்பான இலக்குகளை நிர்ணயித்து செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் வழிமுறைகள் தொடர்பான திறனை மேம்படுத்தும் நோக்கில் பிரதேச கிராமக்கிளைகளில் பணியாற்றுவரும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 15பேரை உள்ளிணைத்து இணைப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களினால் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

❖ இளையோர் திறன் மேம்பாடு தொடர்பாக அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான பொத்துவில், திருக்கோவில், கல்முனை, காரைதீவு, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 32 உள்ளிணைத்து இணைப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களினால் இரு விழிப்புணர்வுப் பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

- நிறுவனக் கட்டமைப்புக்கள் தொடர்பாகவும், கிராம மட்ட, பிரதேச மட்டத்தில் நிர்வாகிகளது கடமைகள், பொறுப்புக்கள், கண்காணிப்பு முறைமைகள் தொடர்பாக 6 பிரதேச நிர்வாக உறுப்பினர்கள் 66 பேரையும் உள்ளிணைத்து இணைப்பாளர் அவர்களினால் இரு பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.
- பாலர் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமைகளை மேம்படுத்தல் தொடர்பாக பாலர் பாடசாலை ஆசிரியர்கள் 41 பேரை உள்ளிணைத்து கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.






- கிளை ரீதியாக செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக 6 பிரதேசத்திலும் கிளை ரீதியாக கிளைக்கூட்டம், குழுக்கூட்டம், குழுத்தலைவிகள் கூட்டம் நடாத்தப்பட்டு பிரதேச, கிராம மட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள் ஆராயப்பட்டு அவற்றுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்னன.

- கிராமமட்ட பணியாளர்களுக்கான (FC,DMO) வாராந்த மீளாய்வுக்கூட்டமானது திறன் மேம்பாட்டுப் பணிப்பாளர் திருமதி. கௌரிஸ்வரன் சுகிர்தினி அவர்களினால் வாராந்தம் வியாழக்கிழமைகளில் நடாத்தப்பட்டு பிரதேச, கிராம மட்டத்தில் காணப்படும் குறைபாடுகள், பின்னடைவுகள் குறித்து ஆராயப்பட்டு அவற்றுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் அடிப்படையில் 21 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளது.





- திட்டச் செயற்பாட்டு முன்னேற்றம் தொடர்பாகவும், செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் பிரச்சினைகள், திட்டத்தின் பின்னடைவுகள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்கும் நோக்கில் அமைப்பினால் மாதாந்த மீளாய்வுக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் இவ்வாண்டில் 08 மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது.





- நிறுவன செயற்பாடுகள், மாற்றங்கள் குறித்து உபாயத்திட்டங்களை வகுத்து புதிய தீர்மானங்கள், நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் அமைப்பினால் மாதாந்தம் ஆளுனர்சபைக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு வருகின்றது.

**11. இவ்வாண்டில் நிதி வழங்கிய நிறுவனங்கள் பற்றிய விபரம்.**

| | | |
|---|---|---|
| UNICEF | - | 1,292,750.00 |
| DIAKONIA | - | 4,981,412.23 |
| NECCDEP | - | 1,871,998.71 |
| ODW | - | 6,163,528.00 |
| OXFAM | - | 5,954,760.00 |
| WUSC-VT | - | 1,904,998.00 |
| WUSC –YITP | - | 5,436,678.50 |
| **TOTAL** | - | **27,606,125.44** |

**12. நடைபெற்ற நிகழ்வுகள்.**

**01. புதுவருட நிகழ்வு :-** 2010ம் ஆண்டின் புதுவருட நிகழ்வானது சுவாட் தலைமையலுவலக பயிற்சி நிலையத்தில் ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராசா அவர்களின் தலைமையில் 2010.01.01ம் திகதி நடாத்தப்பட்டது. இதில் பிரதம அதிதிகளாக …………, கலந்து சிறப்பித்தனர்.






**02. சர்வதேச மகளீர் தினம்.**

சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு சுவாட் அமைப்பின் கல்முனை, காரைதீவு, நாவிதன்வெளி, திருக்கோவில் ஆகிய பிரதேச காரியாலயங்களில் இப் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர்களின் தலைமையில் சர்வதேச மகளீர் தினவிழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக GS, DS, உதவிக் கல்விப்பணிப்பாளர், வைத்திய அதிகாரிகள், சுகாதார பரிசோதகர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கிளை நிர்வாக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டதுடன் பிரதேச, கிளை மட்டத்தில் உயர் நிலையில் முன்மாதிரியாகச் செயற்படும் பெண்களுக்கு கௌரவிப்பும் வழங்கப்பட்டது.






03. இவ்வருட நவராத்திரியினை முன்னிட்டு 17.10.2010ம் திகதி விஜயதசமி நிகழ்வு கொண்டாடப்பட்டது.




04. சர்வதேச சிறுவர்தின நிகழ்வை முன்னிட்டு இவ்வாண்டில் காரைதீவு, பொத்துவில் பாலர் பாடசாலைகளில் மாணவர் கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.




13. பணியாளர்கள் பெற்றுக் கொண்ட பயிற்சிகள்.

- இலக்குகளை நிர்ணயித்தல்.
- கடமைகளும், பொறுப்புக்களும்.
- பணியாளர் கொள்தகுதிறன் விருத்தி.
- அறிக்கையிடல்.
- திட்ட முன்மொழிவு தயாரித்தல்.
- பால்நிலை சமத்துவம்.
- நுண்கடன் திட்டம்.
- உணவு பதனிடல் முறைமைகள்.
- தொழில் முன்னாயத்தம்.
- சிறுவர் கல்வியின் முக்கியத்துவம்.
- நிறுவனக் கட்டமைப்பு.
- திட்ட கண்காணிப்பு முறைமைகள்.
- பொது சுகாதார மேம்பாடு.
- அனர்த்த அபாயக்குறைப்பு.
- வாழ்வாதாரத் திட்ட மேம்பாட்டு.
- முரண்பாட்டுத் தீர்வு.
- கணக்கு வைப்பு முறைமை.
- காலநிலை மாற்றம்.
- குழுக்கள் வலுவூட்டல்.
- உரிமைகளைப் பெற்றுக்கொள்ளல்.

(இணைப்பு – 01)

## 14. இவ் வருடம் எமது அமைப்பிற்கு வருகைதந்த பிற நிறுவனங்கள்.

| இல | திகதி | நிறுவனம் | வருகையின் நோக்கம் |
|---|---|---|---|
| 1 | 2010.01.07 | Wusc | திட்ட ஆரம்பக்கலந்துரையாடல், திட்ட ஒப்பந்தம் |
| 2 | 2010.01.13 | Wusc | களப்பணியாளர் நேர்முகத்தெரிவிற்காக |
| 3 | 2010.01.18-21 | ODW -Auditors | ODW திட்ட கணக்கிணை பரிசீலனை செய்தல் |
| 4 | 2010.01.23 | Oxfam | திட்டக்கலந்துரையாடல் |
| 5 | 201.01.29 | Wusc | திட்டக்கலந்துரையாடல் |
| 6 | 2010.02.05 | Oxfam | திட்டக்கலந்துரையாடல் ( ஆவணப்படுத்தல் முறைமை) |
| 7 | 2010.02.10 | Oxfam (Australia) | Micro Credit தொடர்பான விடயங்கள் அமைப்பினால் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பது தொடர்பான கலந்துரையாடல் |
| 8 | 2010.02.11 | Wusc | இத்திட்டத்தின் பயிற்சி நடத்துனர்களுடன் பயிற்சி தொடர்பான கலந்துரையாடல் நடாத்தல். |
| 9 | 2010.02.13-15 | VDF Team (Jaffna) | சுவாட் நடைமுறைகளைக் கற்றுக்கொள்ளல் |
| 10 | 2010.02.17 | Oxfam | Oxfam Audit reports தொடர்பாக கலந்துரையாடல் |
| 11 | 2010.02.17 | CA | Field visit (Navithanvely) |
| 12 | 2010.02.19 | Youth team (Jaffna) | நிறுவன நடைமுறைகள் செயற்பாடுகள் பற்றி அறிதல் |
| 13 | 2010.02.25 | Oxfam | Monthly Progress Review Meeting |
| 14 | 2010.03.01 | Oxfam | குழுக்களை அமைத்தல் மற்றும் பலப்படுத்தல் தொடர்பாக கலந்துரையாடல் |
| 15 | 2010.03.06-07 | 03 representative of V.T.C | ODW திட்ட AC Course Final Assesment நடாத்தல் |
| 16 | 2010.03.13 | 01 representative of V.T.C | ODW திட்ட AC Course Final Assesment நடாத்தல் |
| 17 | 2010.03.23 | Wusc | Field visit (Thirukkovil) |
| 18 | 2010.03.24 | Oxfam | திட்டக்கலந்துரையாடல் |
| 19 | 2010.04.06 | Diakonia | திட்டக்கலந்துரையாடல் |
| 20 | 2010.04.06 | Oxfam | Accounts பார்வையிடல் |
| 21 | 2010.04.06 | ODW | Accounts பார்வையிடல் |
| 22 | 2010.04.06 | WUSC –YITP | திட்டச் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு |
| 23 | 2010.04.12 | WUSC –YITP | திட்டச் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு |
| 24 | 2010.04.16 | WUSC –YITP | திட்டச் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு |
| 25 | 2010.04.19 | WUSC –VT | திட்டச் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு |
| 26 | 2010.04.19 | LWR | நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளரை அறிமுகம் செய்தலும், திட்டக் கலந்துரையாடலும். |
| 27 | 2010.04.19 | OXFAM | Field Visits |
| 28 | 2010.04.20 | OXFAM | Field Visits |
| 29 | 2010.04.21 | OXFAM | Field Visits & Accounts பார்வையிடல் |
| 30 | 2010.04.23 | OXFAM | & Accounts பார்வையிடல் |
| 31 | 2010.04.26 | OXFAM | Interview(PC,Driver,Pos Gender &Protection |
| 32 | 2010.04.24-26 | Diakonia | Field visit & Document தயாரித்தல். |
| 33 | 2010.05.07 | WUSC | திட்டக்கலந்துரையாடல் |
| 34 | 2010.05.21 | Neccdep | திட்டக்கலந்துரையாடல் |
| 35 | 2010.06.09 | Oxfam | Field Visits & Document பார்வையிடல் |
| 36 | 2010.06.10 | ODW | திட்டக்கலந்துரையாடல் |
| 37 | 2010.06.17 | LWR | திட்டக்கலந்துரையாடல் |
| 38 | 2010.06.29 | WUSC | Inventory Check பண்ணல் |
| 39 | 2010.07.02 | Sanova System | சேமிப்பு கடன் திட்ட கலந்துரையாடல் |
| 40 | 2010.07.03 | OXFAM | Accounts பார்வையிடல் |
| 41 | 2010.07.07 | WUSC | Accounts பார்வையிடல் |

| | | | |
|---|---|---|---|
| 42 | 2010.07.12 | WUSC | Accounts பார்வையிடல் |
| 43 | 2010.07.22 | OXFAM | Accounts பார்வையிடல் |
| 44 | 2010.08.26 | TVEC | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல் பார்வையிடுவதற்கு |
| 45 | 2010.08.27 | WUSC/UNICEF | YITP திட்டம் தொடர்பாக மதிப்பீடு செய்வதற்கு |
| 46 | 2010.08.21 | NECCDEP | Neccdep தொடர்பாக ஆவணங்கள் பெறுவதற்கு |
| 47 | 2010.09.27 | Diakonia | திட்டக்கலந்துரையாடல் |
| 48 | 2010.09.30 | WUSC | Gender தொடர்பான மதீப்பீடு |
| 49 | 2010.12.17 | UNDP (Jaffna) | நிறுவன நடைமுறைகள் செயற்பாடுகள் பற்றி அறிதல் |










**15. இவ்வருடம் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள்.**

1. இடம் பெயர்ந்தோருக்கான அடிப்படைக் கொள்கைகள், நடைமுறைகள் தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட 114 பயனாளிகளை உள்ளிணைத்து 04 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்கின் ஊடாக தமது உரிமைகளைப் தாமாகவே உரிய அதிகாரிகளைத் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்வதற்கான நிலையினை இவர்கள் பெற்றுள்ளனர்.

2. அடிப்படை உரிமைகள் தொடர்பாக செயல்திறன் மிக்க பெண்கள் குழுக்களை ஒன்றிணைத்து 21 கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடல்களில் 772 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

3. அனர்த்த அபாயக்குறைப்பு திட்டமிடல் தொடர்பாகவும், காலநிலை மாற்றம் தொடர்பாகவும் கிராமமட்ட முதற்தர விவசாயிகள் மற்றும் சமூக வலுவூட்டாளர்கள் 178 உள்ளிணைத்து 06 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

4. கமநல சேவை நிலையங்களினூடாக விவசாயக்காணிகள், பதிவுகள், பொருளாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ளுதல் சம்மந்தமாக (PLR/HLR) திருக்கோவில், பொத்துவில் ஆகிய இரு பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 29 விவசாயிகளை உள்ளிணைத்து ஒரு விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.

5. சந்தை வசதிகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான திட்டமிடல் கலந்துரையாடலானது திருக்கோவில் பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 25 விவசாயிகளை உள்ளிணைத்து வாழ்வாதார திட்ட உத்தியோகத்தர் அவர்களினால் நடாத்தப்பட்டுள்ளது.

6. CIC company ஊடாக விவசாயிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய உதவிகள், சேவைகள் தொடர்பாக விவசாயப் போதனாசிரியர், முதல்நிலை விவசாயிகள், SARC அமைப்பின் அங்கத்தவர்கள் 154பேரை உள்ளிணைத்து 04 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது.

02. வங்கிச் சேவைத்திட்ட நடைமுறைகள், கடன், சேமிப்பு நடவடிக்கை, மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட 409 விவசாயிகளை உள்ளிணைத்து வங்கி முகாமையாளர்களைக் கொண்டு 11 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

03. உறவுகளைக் கட்டியெழுப்புதல், முரண்பாட்டு முகாமைத்துவம் தொடர்பாக சமூகத் தலைவர்கள், இளையோர்கள் 122 பேரை உள்ளிணைத்து 04 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது.

04. பொது சுகாதார உடல் நல மேம்பாடு குறித்து (PHAST) தெரிவு செய்யப்பட்ட கிராம மக்கள், சிறுவர்கள், பொது சுகாதார தொண்டர் குழுக்கள் மற்றும் கிராமத்தலைவர்கள் உள்ளடங்களாக 198 பேரை உள்ளிணைத்து 07 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

05. நீர் முகாமைத்துவம், சுகாதார அடிப்படைக் கொள்கைகள் தொடர்பாக வினாயகபுரம்-01,02,03,04 மற்றும் சாகாமம், தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு,

ஹிஜ்ரா, ரொட்டை ஆகிய கிராமக் கிளைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அரச அதிகாரிகள், பிற நிறுவனப் பணியாளர்கள் 426 பேரை உள்ளிணைத்து 08 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

06. பொது சுகாதார முன்னேற்றங்கள் குறித்து சுகாதார திணைக்கள அதிகாரி திருமதி. S.ராஜேந்திரா அவர்களைக் கொண்டு 03 Quarterly meeting நடாத்தப்பட்டுள்ளது. இதில் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், நீர்வழங்கல் வடிகால் திணைக்கள அதிகாரிகள், அரச சார்பற்ற அமைப்புக்கள் உள்ளடங்களாக 75 பேர் கலந்து கொண்டு, நீர், பொது சுகாதார அபிவிருத்தியில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் திணைக்கள ரீதியாக ஆராயப்பட்டது.

07. பிரதேச செயலகம் ஊடாக சட்ட ரீதியான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பான திருக்கோவில் பிரதேச கிராம மக்கள் 300போரை உள்ளிணைத்து ஒரு விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.

08. பெண் தலைமைத்துவம், பெண்கள் அபிவிருத்தி, பெண்கள் உரிமைகள், பால்நிலை அபிவிருத்தி மேம்பாடு தொடர்பாக 10 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் மொத்தமாக 281 செயற்திறன் மிக்க பெண்கள் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

09. போதைப்பொருள் போதைப்பொருள் பாவனை தொடர்பாக திருக்கோவில், பொத்துவில் ஆகிய இரு பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 109 பேரை உள்ளிணைத்து 04 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

10. மாற்று விவசாய தொழிநுட்ப தொடர்பாக (DAFT) வினாயகபுரம் 01,02,03,04 மற்றும் கஞ்சிகுடியாறு, சாகாமம், தங்கவேலாயுதபுரம், ரொட்டை, ஹிஜ்ரா நகர் ஆகிய 08 கிராமக் கிளைகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 427 விவசாயிகளை உள்ளிணைத்து 16 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது. இக் கருத்தரங்கின் மூலம் மாற்றுதொழிநுட்ப விவசாயம் தொடர்பான அறிவினைப் பெற்று மாற்றுவழி தொழிநுட்பத்தை மேற்கொண்டும், மரக்கறித்தோட்டத்திற்கு கரைசல்களை பயன்படுத்தியும் வருகின்றார்கள்.

11. விதைநெல் உற்பத்தி தொடர்பாக விவசாய போதனாசிரியர்களைக் கொண்டு 11 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது. இக்கருத்தரங்குகளில் 386 பயனாளிகள் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

12. தெரிவு செய்யப்பட்ட முதல்தர விவசாயிகள் 14 பேருக்கு அவர்களின் திறன்மேம்பாடு தொடர்பான பயிற்சி ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

13. குறைந்த செலவிலான தொழிநுட்ப அபிவிருத்தி தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட 51 விவசாயிகளை உள்ளிணைத்து 3 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

14. அனர்த்த மறுசீரமைபின்போது அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பாக (SPHERE நியமம்) அரச அதிகாரிகள், மற்றும் பிற நிறுவனப் பணியாளர்கள் 32பேரை உள்ளிணைத்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

15. சிறுவர்களுக்கான பொது சுகாதார மேம்பாடு தொடர்பாக(CHAST) 24 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்குகளில் சிறுவர் கழகங்கள், கிராம சுகாதார தொண்டர் குழுக்கள், பிற நிறுவனப் பணியாளர்கள் உட்பட 1002 பேர் கலந்து கொண்டனர்.

16. டெங்கு நோய் தொடர்பான தெரிவு செய்யப்பட்ட கிராம மக்கள், கிராமமட்ட சுகாதார தொண்டர் குழுக்கள் 94 பேரை உள்ளிணைத்து PHI திரு.மகேஸ்வரன், MOH திருமதி சுலக்ஷனா ஆகியோரைக் கொண்டு 03 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது.

17. HIV/AIDS தொடர்பாக கிராமத்தலைவர்கள், இத்திட்டப் பணியாளர்கள் 45 பேரை உள்ளிணைத்து வளவாளர் திரு. விக்கினேஸ்வரன் அவர்களினால் 02 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது.

18. பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பாக கிராம மட்டத்தில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும், கிராமக் குழுக்களுக்கும் விழிப்புணர்வூட்டி அவர்களிடையே ஓர் ஒன்றிணைந்த வலைப்பின்னலை ஏற்படுத்தும் நோக்கில் RDS அங்கத்தவர்கள், கிராம மட்ட செயற்திறன்மிக்க பெண்கள் குழு அங்கத்தவர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், மற்றும் திருக்கோவில் பொலிஸ் மகளிர் பிரிவு அதிகாரிகள் உட்பட 71 பேரை உள்ளிணைத்து 03 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

19. விவசாயக் காப்புறுதி தொடர்பாக திருக்கோவில், பொத்துவில் ஆகிய இரு பிரதேசங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 113 விவசாயிகளை உள்ளிணைத்து 4 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது.

20. இவ் வாழ்வாதார திட்டச் செயற்பாட்டினை வினைத்திறனாக மேற்கொள்ளும் பொருட்டு பணியாளர்களுக்கான திட்ட முகாமைத்துவப் பயிற்சியானது இணைப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களினால் இத்திட்டத்துடன் தொடர்புடைய பணியாளர்கள் 22 பேரை உள்ளிணைத்து தலைமையலுவலக பயிற்சிமண்டபத்தில் நடாத்தப்பட்டுள்ளது.